ஈங்கிவன் போல் இனி வையத்தில் யார்தான் உண்டு?

நெஞ்சிலே வீரம் தேக்கி,
நினைவெலாம் வைரம் ஆக்கி,
பிஞ்சிலே கழகந் தூக்கி,
பிழையிலா வாழ்வை நோற்று,
வஞ்சக உலகம் வீழ,
வரலாற்றில் பெயர்செ துக்கி,
பஞ்சுநூல் பூட்டி வைத்த,
பருத்திபோல் ஆடை ஆனோன்.!

வெஞ்சமர்க் களத்தில் வென்று
வெற்றிகள் பலகு வித்தோன்;
தஞ்சைமண் பிறப்பெ டுத்துத்;
தரணித்தோள் போற்ற நின்றோன்;
விஞ்சிடும் வினைகள் செய்தே ,
விண்முட்ட சாத னைகள்,
கொஞ்சிடக் களித்தோன்; கண்டோன்:
குலமது தழைக்க வாழ்ந்தோன்!

அஞ்சிடா பெரியார், அண்ணா;
அவர்தந்த தன்மா னத்தை;
நெஞ்சிலே கலைஞர் வைத்தான்;
நிலம்தோறும் மாந்தர் மீட்டான்;
நஞ்சினை வார்த்தோர் வீழ,
நலமது தழைக்க நின்ற,
விஞ்சிடும் அன்னோ னன்றி,
வேறுயார் தமிழ்மண் ணில்சொல்?

தாழ்ந்தவர் , தீண்டா மண்ணில் !
தாரணி யெங்கும் மாண்டு
வீழ்ந்துதாம் அழிந்தா ரிங்கே !
விடியலை எண்ணி எண்ணி
வாழ்ந்திட எல்லை யின்றி
வையத்தில் ஓடி நைந்தார் !
பாழ்பட்டார் பாடு பட்டோர்!
படுகுழி வீழ்ந்தே செத்தார்!

ஆதர வற்றோர் அன்ன
அனைவர்க்கும் மீட்போ னாகி
ஆதவன் போலே இங்கு
ஆரூரார் வந்து காத்தார்!

போதகர் பெரியார், அண்ணா
போற்றினர் ! புவனம் காத்தே ,
மேதகு அறிவின் மேன்மை
மேதினி வாழ்த்தக் கண்டார் !

ஈங்கிவன் போல நாட்டில்
எவனடா இருந்தான் சொல்?சொல்?
ஓங்கிடுப் புகழை, மாண்பை
உலகுவாழ் தமிழுக் காகத்
தாங்கினான் மார்பில் ஈட்டி
தன்மடிக் குழந்தை போல !
வாங்கினான் துயரத் துன்பம்
வையத்து மாந்தர்க் காக !.

அரசியல் அமைப்புச் சட்டம்
அனுதினம் காத்து நின்றோன்!
முரசொலி ஏட்டை நாளும்
முழக்கியே உழுதோன்! மன்றக்
கரவொலி எழுப்புக் காட்சிக்
கருத்தினால் நெஞ்சம் தைத்தோன் !
தமிழ்த்தகு வார்த்தை சிந்தித்
தவழவும் விட்டோன் வாழி!

கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக் குழுத்தலைவர்

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு முன்னிட்டு, தொகுதிக்குட்பட்ட சென்னை மாநகராட்சியின் 12 பள்ளிகளில் 'எம்.கே.மோகன் சாரிடபுள் டிரஸ்ட்' குழுமத்தின் சார்பில் இலவச பல் பரிசோதனை முகாம் ஒருங்கிணைக்கப்பட்டு சுமார் 3500 குழந்தைகளுக்கு இலவசமாக சிகிச்சை வழங்கப்பட்டது, முகாமின் நிறைவாக செனாய் நகர் வி.க மேல்நிலைப் பள்ளியில் பல் மருத்துவர்கள் எம்.கே.மோகன் குழுமத்தால் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவர் ந. இராமலிங்கம் எம்.சி., அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர் ச. பரமசிவம், கழக தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், அதிகாரிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் உடன் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எலமந்தா
ஆகஸ்ட் 7 (1995)

தி.மு.கழக ஆதிதிராவிட நலப் பிரிவு மாநில செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

எப்பொழுதும் ஓடியாடி ஏதாவது கழகப் பணி, பொதுப்பணி மற்றும் ஆதிஆந்திர மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நிகரற்று விளங்கியவர்.

"தொண்டனாக அலைந்தவர். தொழில் மேற்கொண்டு சிறந்தவர். என் விருப்பம் நிறைவேற்றிட எம்.எல்.சியாகப் பொறுப்பேற்று மேலவையில் கருத்து முழக்கம் செய்தவர். கழகத்தை உயிராக எண்ணியவர்!" என தலைவர் கலைஞர் அவர்களால் 'வீரவேங்கையொன்று வீழ்ந்ததே!' என இரங்கல் கடிதத்தில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மதுரை மாவட்டத்தில் ரூ.1.60 கோடி மதிப்பில்

மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் புதிய கட்டடங்கள்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.மூர்த்தி திறந்து வைத்தனர்!

மதுரை, ஆக.7- மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் கள்ளந்திரியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பாக நேற்று (06.08.2024) நடைபெற்ற விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி ஆகியோர் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 5 கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் :

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பொதுசுகாதார துறைக்கு முக்கியத்துவம் வழங்கி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 2,286 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 8,713 துணை சுகாதார நிலையங்கள் என மொத்தம் 10,999 மருத்துவமனைகள் உள்ளன. இதில் ஏறத்தாழ 2500 மருத்துவமனைகள் வாடகை கட்டடங்களிலும் பயன்படுத்த இயலாத நிலையில் சிதிலமடைந்தும் உள்ளன. அதன்படி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இம்மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மதுரை மாவட்டத்தில் கள்ளந்திரி அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு கட்டடம், சக்குடி, உச்சப்பட்டி ஆகிய இடங்களில் தலா 20 லட்சம் மதிப்பீட்டிலும், டி.ஆண்டிபட்டி, வெள்ளரிபட்டி ஆகிய இடங்களில் தலா 30 லட்சம் மதிப்பீட்டிலும் 4 துணை சுகாதார நிலையங்கள் என மொத்தம் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் 5 புதிய மருத்துவக் கட்டடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் குழந்தைகள் நலன் மற்றும் ஆராய்ச்சி மைய கட்டடம், ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வார்டு கட்டடம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு கட்டடப்பணிகளும் மேலூர் அரசு மருத்துவமனையில் 20 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு, 9.21 கோடி மதிப்பீட்டில் 60 படுக்கைகள் கொண்ட அவசரகால தீவிர சிகிச்சை பிரிவு, உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஆய்வக கட்டிடம் உட்பட ஆரம்ப சுகாதாரநிலைய கட்டடங்கள், துணை சுகாதார நிலைய கட்டடங்கள் என மதுரை மாவட்டத்தில் மட்டும் ரூ.66.86 கோடி மதிப்பீட்டில் 18 புதிய மருத்துவ கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் முழுமையாக நிறைவேற்றப் பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அவற்றில் மதுரை மாநகராட்சியில்62, திருமங்கலம் நகராட்சி1, மேலூர் நகராட்சி1 என மதுரை மாவட்டத்தில் மொத்தம் 64 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 மதுரை மாநகராட்சி 45, திருமங்கலம் நகராட்சி1 ஆகிய இடங்களில் திறந்து வைத்தார்கள். மேலும் 18 இடங்களில் விரைவில் திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை எய்ம்ஸ் கட்டுமான பணிகளைப் பொறுத்தவரையில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தில் பேசிய ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கட்டுமான பணிகள் தாமதமாவதை ஒப்புக்கொண்டுள்ளார். இக்கட்டுமான பணிகளை விரைவுபடுத்து வது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனையின்படி ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்த உள்ளோம். இந்தியாவில் வலுவான மருத்துவ கட்டமைப்பு கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இவ்விழாவில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் மரு.செல்வ விநாயகம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி சூரியகலா கலாநிதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி மணிமேகலை, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பா. குமரகுருபரன், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி ஜெயந்தி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செ.அய்யாசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பகுதிச் செயலாளர் தி.மு. தனியரசு நிகழ்ச்சி ஏற்பாட்டில்

திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் கலைஞர் படத்திற்கு மரியாதை - 1000 பேருக்கு உணவு!

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ.வழங்குகிறார்

சென்னை, ஆக.7- சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் இன்று (7.8.2024-புதன்கிழமை) காலை 11.30 மணியளவில் சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு1000 பேருக்கு மதிய உணவை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கு கிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். ஆகையால் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொள்ளும் படிக்கேட்டு கொள்கிறேன்.

அமைதி பேரணி

திரளாகப் பங்கேற்பீர்!

இன்று (7.8.2024) காலை 7 மணிக்கு ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இருந்து காமராஜர் சாலை அண்ணா நினைவிடம் வரை தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அமைதி பேரணி நடைபெற உள்ளது ஆகையால் நமது பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பொதுக் குழு உறுப்பினர்கள் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள், கழக தோழர்கள் தவறாமல் கலந்து கொள்ளும் படி பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

மூவேந்தர்க் கிணையான மூதறிஞர் புகழ்வாழி!



திருக்குவளைப் பூவாகப் பூத்தவர்அவர்
திருவாரூர்த் தேர்போல மூத்தவர்!
கருக்கொண்ட முகிலைப்போல் ஆர்த்தவர்அவர்
கனல்கொண்டு தமிழெழுதிப் பார்த்தவர்!

'இளமையினைப் பலி'யாக அளித்தவர்அவர்
இனவேங்கைப் புலியாகச் சிலிர்த்தவர்!
களமாடி வாழத்தான் முளைத்தவர்புதுக்
கற்பனையில் அற்புதங்கள் விளைத்தவர்!

இந்திப்பேய் வரும்போது தடுத்தவர்உயர்
எண்ணத்தில் புயலாகித் துடித்தவர்!
முந்திப்போய்ச் சிறைவாசம் அடைந்தவர்தன்
மூளையினால் எதிரிகளைக் கடைந்தவர்!

பெரியாரின் ஏடுகளைச் சுமந்தவர்அவர்
பேசிநின்ற சுவடுகளில் நடந்தவர்!
எரிமலையின் சீற்றத்தை முகந்தவர்அவர்
எதிர்ப்புகளுக் கிடையேதான் வளர்ந்தவர்!

சூரியனில் சுடரெடுத்துச் சுழன்றவர்அவர்
சுற்றிவரும் பூமியைப்போல் உழன்றவர்!
ஆரியத்தின் ஆயுதங்கள் அளந்தவர்அதை
அண்ணாவின் கவசத்தால் பிளந்தவர்!

தனிச்சிறையில் என்றாலும் கிடந்தவர்அவர்
தமிழ்காக்க இருட்டறையில் தவழ்ந்தவர்!
'அணிலோடும்' விளையாடி மகிழ்ந்தவர்அவர்
அரசியலைத் தமிழாக்கிக் குளிர்ந்தவர்!

தடைகண்டு படைகண்டு சிரித்தவர்தன்
தலைகொண்டு தொடர்வண்டி மறித்தவர்!
நடைவண்டி யில்சென்றும் உழைத்தவர்தன்
நாவாலே வெற்றிகளைக் குவித்தவர்!

சமத்துவத்தை வாழ்நெறியாய் வரித்தவர் புதுச்
சரித்திரத்தைப் பொன்னேட்டில் பொறித்தவர்!
நமக்கென்றே 'தளபதியைக்' கொடுத்தவர்நம்
நரம்புகளில் உணர்வேற்றிக் களித்தவர்!

வரலாற்றின் பெருமிதமாய் நிமிர்ந்தவர்தன்
வரலாற்றில் தமிழகத்தை வரைந்தவர்!
உரைநடையின் ஒளியாகி உயர்ந்தவர்அவர்
உவமையிலாக் கலைஞானம் மிகுந்தவர்!

தனைக்கொண்டு தனையெழுதி நின்றவர்அவர்
தமிழென்னும் தானைகொண்டு வென்றவர்!
முனைமுகத்தில் எப்போதும் முன்னவர்அவர்
மூவேந்தர்க் கிணையான மன்னவர்!

தேனகத்துப் பூமழையாய்ப் பொழிந்தவர்அவர்
செம்மொழியாய் மனமெல்லாம் வழிந்தவர்!
ஞானத்தால் பகையாவும் கொய்தவர்அவர்
நமக்காக மானவுடை நெய்தவர்!

காற்றுக்கும் திசைகாட்ட வந்தவர்தமிழ்க்
காவிரியாய் வளமள்ளித் தந்தவர்!
ஆற்றுக்கும் நடைதந்த நாவலர்அவர்
அரசியலில் கொடிநட்ட பாவலர்!

அவர்போற்றி வைத்ததமிழ் வாழியே!அவர்
அடிவைத்த தடமெல்லாம் வாழியே!
அவர்செய்த அணிகலன்கள் வாழியே! நல்
அறம்போல அவர்புகழும் வாழியே!

டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.,
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்